FMM

# முதல் இடைப் பருவத் தேர்வு – 2022

**11** - ஆம் வகுப்பு

## கணக்குப்பதிவியல்

பதிவு எண். | | | | | | |

காலம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

பகுதி - I

**I சரியான விடையைத் தேர்வு செய்யவும்.** 15 X 1 = 15

1. நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது
அ) சமூகக் கணக்கியல் ஆ) காரியதரிசிகளின் கணக்கியல்
இ) மேலாண்மைக் கணக்கியல் ஈ) பொறுப்பு கணக்கியல்

2. ஒரு வணிகத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ள அடிப்படையானது
அ) குறிப்பேடு ஆ) இருப்பாய்வு இ) இருப்புநிலைக்குறிப்பு ஈ) பேரேடு

3. பின்வருவனவற்றுள் எது கணக்கியலின் முதன்மை நோக்கம் ஆகாது
அ) நடவடிக்கைகளை முறையாகப் பதிவு செய்தல்
ஆ) வணிகத்தின் இலாபம் ஈட்டும் திறனை அறிந்து கொள்ளுதல்
இ) நிறுவனத்தின் நிதி நிலையை அறிந்து கொள்ளுதல்
ஈ) வரிவிதிக்கும் அதிகாரிகளிடம் வரித் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்

4. கணக்கியல் எத்தனை அடிப்படைகள் உள்ளன?
அ) ஒன்று ஆ) இரண்டு இ) மூன்று ஈ) நான்கு

5. வணிகத்தின் உரிமையாளர் இட்ட முதலிற்கு, வணிக நிறுவனம் கடன்பட்டிருக்கிறது என்பதை கூறும் கருத்து அ) பண மதிப்பீட்டுக் கருத்து
ஆ) அடக்கவிலை கருத்து இ) வணித்தனித்தன்மை கருத்து ஈ) இரட்டைத் தன்மை கருத்து

6. GAAP என்பது
அ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள்
ஆ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்
இ) பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் வழிமுறைகள் ஈ) இவற்றுள் ஏதுமில்லை

7. இந்தியாவில், கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு
அ) இந்திய மைய வங்கி ஆ) இந்திய அடக்கவிலை மற்றும் கணக்காளர் நிறுவனம்
இ) உச்சநீதி மன்றம் ஆ) இந்தியப் பட்டயக்கணக்காளர் நிறுவனம்

8. ........ கருத்து ஒரு குறிப்பிட்ட கணக்காண்டில் ஈட்டிய வருவாய், அவ்வருவாயை ஈட்ட அவ்வாண்டில் செய்த செலவுகளோடு ஒப்பிடப்படுவதைக் குறிக்கும் அ) கணக்கியல் காலக்கருத்து
ஆ) பொருத்துகைக் கருத்து இ) இரட்டைத் தன்மை கருத்து ஈ) அடக்கவிலைக் கருத்து

9. ............... என்ற இத்தாலியர், இரட்டைப் பதிவு கணக்கியல் முறையை மேம்படுத்தினார்.
அ) ஆர்.என்.கார்ட்டர் ஆ) ஜே.ஆர்.பேட்லிபாய் இ) லூகா பாசியோலி ஈ) முன்ரோ மற்றும் பால்மர்

10. கணக்கியல் சமன்பாடு, எந்த கணக்கியல் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது?
அ) இரட்டைத் தன்மை ஆ) நிலைத்தன்மை இ) நிறுவனத் தொடர்ச்சி ஈ) நிகழ்வுத்தன்மை

11. பின்வருவனவற்றில் பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு எது?
அ) கட்டடம் கணக்கு ஆ) கொடுபட வேண்டிய சம்பள கணக்கு
இ) மகேஷ் கணக்கு ஈ) பாலன் நிறுவனம்

12. உரிமையாளரால், வணிகத்திலிருந்து எடுக்கப்படும் தொகை வரவு வைக்கப்படும் கணக்கு
அ) எடுப்புகள் கணக்கு ஆ) ரொக்கக் கணக்கு
இ) முதல் கணக்கு ஈ) கொள்முதல் கணக்கு

13. பொருத்துக.
1) சொத்து - i) சம்பளம் வழங்கியது
2) பொறுப்பு - ii) வாடகை பெற்றது
3) வருவாய் - iii) கடனீந்தோர்
4) செலவு - iv) நிலம் மற்றும் கட்டடம்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ) | iv | i | ii | iii |
| ஆ) | iv | iii | ii | i |
| இ) | iii | iv | i | ii |
| ஈ) | ii | iii | iv | i |

14. முன்கூட்டிச் செலுத்திய வாடகை ஒரு . அ) பெயரளவு கணக்கு
ஆ) ஆள்சார் கணக்கு இ) சொத்துக்கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

15. சொத்துக் கணக்கு கையாள்வது
அ) தனிப்பட்ட நபர்கள் ஆ) செலவுகள் மற்றும் இழப்புகள்
இ) சொத்துகள் ஈ) வருமானம் மற்றும் இலாபங்கள்

## பகுதி - II

**எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண். 22 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 5 X 2 = 10

16. கணக்கியலை வரையறு.
17. கணக்கியல் செயல்பாட்டிலுள்ள படிநிலைகள் யாவை?
18. கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு.
19. பின்வருவனற்றை ஆள்சார்கணக்கு, சொத்து கணக்கு மற்றும் பெயரளவு கணக்கு என்று வகைப்படுத்துக.
அ) முதல் ஆ) கட்டடம் இ) உள் ஏற்றிச்செல் செலவு
ஈ) ரொக்கம் உ) தள்ளுபடிப் பெற்றது ஊ) வங்கி
எ) கொள்முதல் ஏ) கொடுபட வேண்டிய கூலி

20. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக.
சொத்துக்கள் = ? + பொறுப்புகள்
அ) 2,00,000 = 90,000 + ? ஆ) 5,00,000 = ? + 40,000
இ) ? = 3,60,000 + 80,000

21. பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளுக்கான விளக்க குறிப்பு தருக.
சிவம் என்பவரின் ஏடுகளின் குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | | பே.ப.எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|---|
| 2018 | ரொக்கக் க/கு | ப | | 3,00,000 | 3,00,000 |
| ஏப்ரல் 1 | சிவம் முதல் க/கு (....................) | | | | |
| 2 | வங்கி க/கு | ப | | 2,70,000 | 2,70,000 |
| | ரொக்கக் க/கு (....................) | | | | |

22. பின்வரும் நடவடிக்கைகளை மார்ச் 2020 இல் குறிப்பேடுகளில் பதிவு செய்க.

3 ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது 5,000

4 லிப்டன் நிறுவனத்திடமிருந்து சரக்குகளை கடனுக்கு வாங்கியது 10,000

5 ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது 4,000

8 ஜாய் என்பவரிடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது 11,000.

## பகுதி - III

**எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**வினா எண். 29 - க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 5 X 3 = 15

23. கணக்கியலின் பிரிவுகளை சுருக்கமாக கூறுக.

24. பணம் சார்ந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்கியலில் பதியப்படுதல் வேண்டும் விவரி.

25. பின்வரும் நடவடிக்கைகளை ஜனவரி 2018 இல் குறிப்பேடுகளில் பதிவு செய்க.

1 வியாபாரம் தொடங்குவதற்காக கொண்டு வந்தது ரொக்கம் 1,00,000 சரக்கிருப்பு 2,00,000 கட்டடம் 5,00,000.

2 காசோலை மூலம் சம்பளம் வழங்கியது ரூ. 3000

4 வங்கியிலிருந்து கடன் பெற்றது ரூ. 10,000

7 மின் கட்டணம் ரொக்கமாக செலுத்தப்பட்டது ரூ. 1,000

10 நிலை அறிவுறுத்தலின் படி வங்கி செலுத்திய காப்பீட்டு முனைமம் ரூ. 300

26. பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளில் விடுபட்ட தகவல்களை நிரப்புக.

| நாள் | விவரம் | | பே.ப.எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|---|
| 2018 | ............... க/கு | ப | | .......... | |
| மே 1 | ............. க/கு | ப | | ......... | |
| | தினேஷ் க/கு | | | | ............ |
| | (தினேஷ் நொடிப்பு நிலை அடைந்ததால் அவர் செலுத்த வேண்டிய 10,000 அவருடைய சொத்துகளை விற்று ரூபாய்க்கு 60 பைசா வீதம் கணக்குத் தீர்க்கப்பட்டது) | | | | |
| 3 | ................. க/கு | ப | | ......... | |
| | ......க/கு ...... | ப | | ......... | |
| | நிஹா க/கு | | | | ......... |
| | (ரூ. 18,800 பெற்றுக்கொண்டு நிஹாவின் ரூ. 19,000ற்கான க/கு தீர்க்கப்பட்டது) | | | | |

27. கணக்கியல் சமன்பாட்டு முறையில் நடவடிக்கைகளை பதிவு செய்க.

அ) முதல் அதிகரிக்கும் போது, சொத்து அதிகரித்தல்

ஆ) முதல் குறையும் போது, சொத்து குறையும்

இ) பொறுப்புகள் குறையும் போது சொத்துகளும் குறைதல்

28. பின்வரும் நடவடிக்கைகளை குறிப்பேடுகளில் பதிவு செய்க.

1 சொந்த பயனுக்காக ரொக்கம் எடுத்தது ரூ. 8,000

2 சொந்த உபயோகத்திற்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது ரூ. 800

3 தமது சொந்த பயன்பாட்டிற்காக எடுத்துக் கொண்ட சரக்கின் மதிப்பு ரூ. 10,000

29. இரட்டைப் பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.

## பகுதி - IV

2 X 5 = 10

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

30. அ) பின்வரும நடவடிக்கைகளை இராஜா ஹோட்டலின் குறிப்பேடுகளில் பதிவு செய்க.

2019 ஜனவரி

1 ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ரூ. 3,00,000
5 ராஜ்"விடமிருந்து கடன் கொள்முதல் செய்தது ரூ. 1,00,000
9 வங்கியில் ரொக்கம் செலுத்தியது ரூ. 2,00,000
12 Z என்பவருக்கு கடன் விற்பனை செய்தது ரூ. 20,000
20 Z என்பவர் மீது எழுதிய ரூ. 20,000க்கான மாற்றுச்சீட்டினை அவர் ஏற்பு செய்தார்.
23 ராஜ்"விற்கு தேசிய மின்னணு பணப்பரிமாற்றம் மூலமாக ரொக்கம் செலுத்திய கணக்கு தீர்க்கப்பட்டது ரூ. 99,000
25 உரிமையாளரின் சங்க உறுப்பினர் சந்தா காசோலை மூலம் செலுத்தியது ரூ. 200
26 உரிமையாளரின் வீட்டிற்கான மின்கட்டணம் எடுப்பு அட்டை மூலம் செலுத்தியது ரூ. 2,000
28 அறக்கட்டளை அமைப்பிற்கு மதிய உணவு இலவசமாக வழங்கியது ரூ. 1000
31 வங்கி வசூலித்த பாதுகாப்பு பெட்டக வாடகை ரூ. 1000. ***(அல்லது)***

ஆ) செல்வி அறைகலன் விற்பனைச் செய்பவர். பின்வரும் நடவடிக்கைகளை கணக்கியல் சமன்பாட்டின் படி பதிவு செய்க.

1) ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ரூ. 1,00,000
2) வங்கியில் செலுத்திய ரொக்கம் ரூ. 60,000
3) வங்கியிலிருந்து கடன் பெற்றது ரூ. 25,000
4) காசோலை செலுத்தி சரக்கு வாங்கியது ரூ. 10,000
5) சொந்த பயன்பாட்டிற்காக ரொக்கம் எடுத்தது ரூ. 5,000

31. அ) ஆனந்த என்பவர் ஜவுளி வியாபாரம் செய்யும் வியாபாரி. பின்வரும் நடவடிக்கைகளுக்கு ஜனவரி 2018 இல் குறிப்பேட்டினை தயாரிக்க.

1 வியாபாரம் தொடங்க ரொக்கமிட்டது 70,000
2 X நிறுவனத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது 30,000
3 வங்கியில் செலுத்திய ரொக்கம் 40,000
4 L நிறுவனத்திடமிருந்து கடனுக்கு கட்டடம் வாங்கியது 95,000
5 அலுவலகப் பயனுக்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது 5,000
6 ஆனந்தின் சொந்தப் பயனுக்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது 4,000
7 தொண்டு நிறுவனங்களுக்குகாக நன்கொடையாக துண்டுகள் வழங்கியது 3,000
8 ஆனந்த் தமது சொந்த பயன்பாட்டிற்காக சட்டைகள் எடுத்து கொண்டது 12,000
9 மாதிரிகளாக வழங்கிய சேலைகளின் மதிப்பு 3,000
10 சரக்குள் (மேசைவிரிப்புகள்) அலுவலகப் பயன்பாட்டிற்காக எடுத்துக் கொள்ளப்பட்டவை 200

***(அல்லது)*** ஆ) பின்வரும் நடவடிக்கைகளின் கணக்கியல் சமன்பாட்டினை தயார் செய்க.

அ) முருகன் ரூ. 80,000 பணத்தின் தொழிலைத் தொடங்கினார்.
ஆ) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ரூ. 30,000
இ) ரொக்கமாக வழங்கிய சம்பளம் ரூ 5,000
ஈ) குமாரிடமிருந்து சரக்கு வாங்கியதற்கு, பணம் வைப்பு இயந்திரம் மூலமாக செலுத்தப்பட்டது ரூ. 5,000.
உ) கூடுதல் முதல் இட்டது ரூ. 10,000.